RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s142

OPEN ACCESS

# தமிழ் இதழ்களில் பெண்கள்

ச. அருள் ஜோஸ்பின் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# Women in Tamil Magazines

S. Arul Josephine [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: josevin06@gmail.com

Received: 24-12-2021
Revised: 03-09-2022
Accepted: 15-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

Even though the printed version of books started to come in the tenth century, still palm leaves were used to compile the literature. Due to the evolution of printing of books, the conventional types of byhearting and remembering slowly started to dilute. However, only limited books were available before the evolution of printed books. Those available books were also meant for educational purposes only. Books related to entertainment and libraries apart from education campuses were not available at that time. At this point in time, the people started to enjoy the benefits of a printing press where a large volume of books was made available to the public. The newly printed books were not only meant for educational purposes but also for entertainment purposes. In the recent Tamil context, there are two major topics that were highly spoken namely Feminism and Dalitism. In the two-thousand-year-long history of Tamil literature, the space for women and their literature was limited. Expect for the sanga ilakkiyam, the role of women in Tamil literature is scarce. After the Indian independence, many women literates were identified. The flow of literature in the current generation is mostly based on fiction. Due to the domination of the printing press, the volume of books in Tamil was increased in fiction-based books with less importance to grammatical-oriented books. Every script was initiated by men and later it is passed onto women.

**Keywords:** Feminism, Tamil Magazines, Dalitism, Tamil Women Writters.

## முன்னுரை

தமிழ்ச்சூழலில் இன்றைய காலக்கட்டங்களில் மிகப்பரவலாக முன்னெடுக்கப்படுகின்ற இரு பொருண்மைகள் பெண்ணியமும் தலித்தியமும் ஆகும். தமிழ் இலக்கியப் பரப்பின் இரண்டாயிரம் ஆண்டுக் கால வரலாற்றில் பெண்களுக்கான இடமும் அவர்களுடைய இலக்கிய வெளிப்பாடும் குறுகியதாகவே இருந்துள்ளது. சங்க இலக்கியம் தவிர்த்து விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்கே பெண்களின் பங்கு தமிழிலக்கியத்தில் பதிவாகியுள்ளது. இந்திய விடுதலைக்குப் பின்னான காலகட்டத்தில் பெண்கள் பலர் படைப்பாளர்கள் என்று அறியப்பட்டுள்ளனர்.

இந்நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க இலக்கியக் போக்கு புனைக்கதையைச் சார்ந்தே செயல்பட்டது எனலாம். அச்சுஊடகம், உரைநடை வளர்ச்சி, இதழ்களின் பெருக்கம் ஆகியவற்றால் செய்யுள் வடிவம் குறைந்து புனைக்கதை வடிவம் தமிழில் மலரத் தொடங்கியது. ஒவ்வொரு வடிவத்தின் முதல் முயற்சியும் ஆண்களால் மேற்கொள்ளப்பட்டுப் பின்னரே பெண்களால் கைக்கொள்ளப்பட்டது. படித்தல் இன்று பரவலாக இயல்பாக இருந்தாலும் இதற்கு ஒரு பிண்ணனி உண்டு. கல்வியில் எழுத்தறிவின்

பரவலும், அச்சஊடகப் பயன்பாடு நடைமுறைக்கு வந்ததும், சமூகத்தில் படிப்படியாக ஏற்பட்ட மாற்றத்தினால் உருவான நடுத்தரவர்க்கமும் என இவற்றால் கல்வி கற்றலுக்கு அப்பாற்பட்ட வாசித்தல் சாத்தியமாயிற்று.

## இதழ்களின் தொடக்கம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அச்சு நூல்கள் வரத் தொடங்கினாலும் அவற்றுடன் பனையோலைகளும் புழக்கத்தில் இருந்தன. மனப்பாடம் செய்வதையும் நினைவாற்றலையும் முதன்மைப்படுத்திய மரபு சார்ந்த வாசிப்பு முறையும் அது சார்ந்த வாசிப்புப் பழக்கங்களும் அச்சு ஊடகத்தின் நிலைபேற்றால் சிறிதுசிறிதாக வலுவிழக்கத் தொடங்கின. அச்சு நூல்கள் தோன்றுமுன் படிப்பதற்கும் பார்வையிடுவதற்கும் குறிப்பிட்ட அளவு நூல்களே இருந்தன. அவையும் கல்வி கற்றலுக்கான பிரதிகளாகவே இருந்தன. பொழுதுபோக்கிற்கான வாசிப்பும் கல்வி வட்டத்திற்கு வெளியிலான வாசிப்பும் அப்பொழுது இல்லை. இந்நிலையில் அச்சு ஊடகத்தின் வரவும் பயன்பாடும் நூல்களின் எண்ணிக்கையைப் பெருக்கின. அவை பாட நூல்களாக மட்டுமின்றி பொழுதுபோக்கு இதழ்களாகவும் வளர்ந்தன.

## பெண் கல்வியின் தொடக்கம்

பெண் எழுத்துகள் சாத்தியமாவதற்கு மூலகாரணமாக ஆங்கிலேய அரசம் அவர்களைச் சார்ந்த கிறித்துவச் சபைகளுமே தூண்டுதலாக இருந்துள்ளன. அச்சு ஊடகம் எழுத்தை வாசிக்கத் தெரிந்த எவருக்கும் தகவலை, செய்திகளை, கதைகளை இன்னும் பல பகிர்வுகளைக் கொண்டு செல்லும் ஜனநாயக மக்கள் விரும்பும் இயல்புகளைக் கொண்ட ஓர் ஊடகமாயிற்று. “இதழ்களில் புதிராகக் கூறுதல் பின் நிகழ்வைப் பூடகமாகச் சொல்லுதல் வாசிப்போரின் புனைவுத் திறனுக்கு அவரது மனவெளியில் இடமளித்தல் போன்ற கூறுகளைப் புனைக்கதைகள் பெறவேண்டி நேரிட்டது”. நிலம் சாராத நாகரிகம்சார் சமுதாய உற்பத்தியில் ஈடுபட்ட நடுத்தர வர்க்கத்திற்கு வாசிப்பும் அச்சு ஊடக நுகர்வும் தேவையாயிற்று. சங்ககால தமிழ்ச் சமூகத்தில் பெண்கல்வி புழக்கத்தில் இருந்தாலும் காலப்போக்கில் அருகிப் போயிருந்ததை அறிய முடிகிறது (Arasu, 2001).

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தான் அச்சு ஊடகத்திற்கும் பெண்களுக்குமான ஊடாட்டம் நிகழத்தொடங்கியது. சிறிது சிறிதாகப் பெண்கள் இதழ்களை வாசிக்கத் தொடங்கினர். அத்துடன் வெறும் பெண் என்ற அடையாளத்துடனோ தாங்கள் இன்னார் என்ற வெளிப்படையான அடையாளத்துடனோ இதழ்களில் எழுதத் தொடங்கினர். மேனாட்டுக் கல்வியின் வரவாலும், கிறித்துவ இயக்கங்களின் முயற்சியாலும் பெண்கல்வி கால்கொள்ளத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஓரளவு வீச்சுடன் பரவத் தொடங்கியது (Selvakumaran, 2021).

சமூகச் சீர்திருத்தம் தொடர்பான கருத்துகளை முன்வைத்தோர் அதில் பெண்கல்வி உள்ளிட்ட பெண்களின் பல சிக்கல்களைப் பேசினர். பெண்களின் சிக்கல்களை முதலில் ஆண்கள் பேச, கல்வியும், எழுத்தறிவும், இதழ்களுடனான ஊடாட்டமும் கைவரப் பெற்ற பெண்கள் தாங்கள் இனங்கண்ட தங்கள் சிக்கல்கள் குறித்து தாங்களே இதழ்களில் பதிவு செய்துள்ளனர். ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகுவதை அறிய முடிகிறது. இதழ்களுடனான ஊடாட்டத்தில் வாசக நிலை, எழுத்து நிலை, இதழ் ஆசிரியராகப் பொறுப்பேற்கும் நிலை என மூன்று நிலைகள் உள்ளன. மூன்றிலும் இதழ் ஆசிரியராக இருப்பதை பெண்களின் எழுத்துப் பரிணாமத்தின் உச்சநிலையாகக் கொள்ளலாம். பண்டிதை விசாலாட்சிஅம்மாள், வி. பாலம்மாள், வை. மு. கோதைநாயகி அம்மாள், மு. மரகதவல்லி, குகப்ரியை போன்றோர் தொடக்கத்தில் உச்சநிலையை எய்தியுள்ளனர். பெண்களின் எழுத்துப் பதிவின் அடுத்த கட்டமாக அவர்களின் எழுத்தினை எழுத்துத்திறத்தை எடை போடுகின்ற மதிப்பீடுகள் இடம்பெறுகின்றன. தொடக்கத்தில் இத்தகைய மதிப்பீடுகள் விமர்சனமாக அமையாமல் பாராட்டுரையாகவே அமைந்துள்ளன. ஆனால் இன்று

பெண்களின் எழுத்தை அவர்களின் குணங்ளை அளக்கும் கருவியாக கொண்டு விமர்சிப்பதை காணமுடிகிறது.

## பெண் எழுத்தின் நோக்கம்

பெண்கள் கற்ற கல்வியின் பயன்பாட்டு ரீதியிலான வெளிப்பாடு ஒவ்வொரு கட்டமாக வளர்ந்தது. புதிதாகக் கற்ற எழுத்தறிவு மற்றும் கல்வியின் மூலமும், மேலை நாட்டின் தாக்கத்தால் வந்த புதிய ஊடகமான அச்சின் ஒரு பகுதியான இதழ்களில் முதல் நிலையில் வாசகராகவும், பின்னர் புனைக்கதை எழுத்தாளர், கட்டுரையாளர், உதவி ஆசிரியர் என்று படிப்படியாகச் சென்று ஆசிரியர் பொறுப்பேற்று நடத்தியுள்ளனர். அத்துடன் தமது எழுத்துப்பணியின் பரிணாம வளர்ச்சிக்கு இதழ்களுடனான தொடர்பை நன்கு பயன்படுத்திப் கொண்டுள்ளனர். மாறிக்கொண்டிருந்த அன்றைய சமுதாயத்திற்கேற்ற வகையில் பெண்கல்வி, விதவை மறுமணம், குழந்தை மண எதிர்ப்பு, பெண்ணுக்குச் சொத்துரிமை, ஓட்டுரிமை ஆகிய பெண்களின் வாழ்க்கைப் பற்றிப் பெண்களின் கருத்துகள் இடம்பெற்றன. மேலும் சமூகத்தையும் குடும்பத்தையும் பொறுத்தவரையில் பெண்களின் பொறுப்பும் பங்கேற்பும் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் இதழ்களில் உள்ள பெண் எழுத்துகள் கருத்துகளை முன்வைக்கின்றன.

“கிறித்தவ சபைகள் வந்த பின்னரே பெண்கள் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. கிறித்தவ சபைகள் பெண் ஆசிரியைகளைக் கொண்ட பல பள்ளிகளை நாடெங்கிலும் தொடங்கின” (Vengadasami, 1962). பத்தொன்பதாம் நூற்றாண்டில் பலரும் இந்தியாவில் சமூகச் சீர்திருத்தம் பேசியபோது பெண்கல்வியின் முக்கியத்துவமும் பேசப்பட்டது. சமூகச் சீர்திருத்தம் என்பது தன்னிச்சையாக நிகழ்ந்த ஒன்றல்ல. இந்திய நாட்டை ஆண்ட ஆங்கிலேயர்கள் தங்களை உயர்ந்தவர்களாகவும் நம் சமூகத்தின் பிற்போக்குத்தனங்களை குறிப்பாகப் பெண்கல்வி இன்மை, குழந்தை மணம், சதி, விதவைகளின் அவலம் போன்றவற்றால் நம்மை நாகரிகமற்றவர்களாகவும் கருதினர். இச்சிந்தனையை மாற்ற சில சமூக சீர்திருத்தங்கள் தேவைப்பட்டன. வலியுறுத்தப்பட்டன.

ஆங்கிலேயர்களின் விமர்சனங்களுக்கான பதிலாக பெண்கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண்கல்வி தேவை என்பது பல சமூகச் சீர்திருத்த ஆர்வலர்களால் வலியுறுத்தப்பட்டாலும் அக்கல்வியானது எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு வரையறை இருந்தது. எழுத்தறிவுடன் சேர்ந்து குடும்பத்தைப் பேணுவதற்குத் தேவைப்படுவன பெண் கல்வியின் உள்ளடக்கமாகச் சொல்லப்பட்டன. இதனை கல்வி கற்ற பெண்களும் ஏற்றுக்கொண்டனர். கல்வி கற்கத் தொடங்கியப் பெண்கள் அக்கல்வி தந்த வாய்ப்பால் தங்கள் எழுத்தின் மூலம் அச்சுஊடகத்தில் பங்கேற்கத் தொடங்கினர். அச்சு ஊடகத்தில் பெண்களின் நிலை இரண்டு வகையினது. ஒன்று வாசக நிலை. மற்றொன்று பங்கேற்கும் நிலை. பங்கேற்கும் நிலையில் இதழில் எழுதுதல் புதினம் முதலிய இலக்கியங்களை எழுதி அச்சுநூலாக வெளியிடுதல் ஒரு வகை. ஆசிரியராகப் பொறுப்பேற்று ஓர் இதழை நடத்துதல் மற்றொரு வகை. எந்தவொரு துறையிலும் ஒருவர் ஈடுபடும் முன் அந்தத்துறை சார்ந்த ஆர்வமும் அறிவும் தேவை. அது இதழியலுக்கும் பொருந்தும். இதழ்களை வாசிக்கும் வாசகராய் இல்லாமல் இதழியல் துறையில் பணியாற்ற முடியாது. எனவே இதழியலில் பங்கேற்க முதல் கட்டம் வாசகராய் இருத்தல் அவசியம். அவ்வாறே பெண்களும் இதழ்களின் வாசகராய் இருந்துள்ளனர். அதன் அடுத்தகட்டமாக இதழில் எழுதுவோராக, துணையாசிரியராக, ஆசிரியராக பரிணமித்துள்ளனர்.

## பெண்களின் இதழ் உருவாக்கம்

இதழின் கட்டமைப்பில் இடம்பெறும் முன்னட்டை, முன்பக்க வாசகம், ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுதல், விளம்பரங்கள், உள்ளடக்க அட்டவணை, தொடங்கி இதழின் உள்ளடக்கத்தில் இடம்பெறும் கதை, கட்டுரை, உள்ளிட்டவை எப்பொருளைப் பற்றிப் பேச வேண்டும் என ஆசிரியப் பொறுப்பில் இருந்து தீர்மானித்தல் வரை பல நுணுக்கமான விவரங்களைக் கையாண்டுள்ளனர். ஆசிரியப் பொறுப்புடன் சேர்த்து தமது புனைக்கதைகளுக்கும், கருத்துகளுக்கும், வெளிப்பாட்டுக் களமாகவும்

(பண்டிதை விசாலாட்சிஅம்மாள் சிந்தாமணி வி. பாலம்மாள் வை. மு. கோதைநாயகிஅம்மாள்) அவற்றுடன் அனுபவ மொழிகளை வெளியிடும் களமாகவும் இதழ்களை சிறப்பாக இவர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளதை அறிய முடிகிறது.

"தங்கள் படைப்புகளின் நூலாக்கத்திற்கும் அவற்றின் பரவலான அறிமுகத்திற்கும் இதழாசிரியர்களாக இருந்தோர் இதழ்களைக் களமாகப் பயன்படுத்தியுள்ளனர். அதன் உச்சமாக இதழின் சந்தாதாரர்களுக்குத் தங்கள் கதை நூலின் பிரதிகளை இலவசமாகவும் சலுகை விலையிலும் கொடுத்துள்ளனர். இதழ்களின் பரவலுக்கு விளம்பரங்களைப் பயன்படுத்தியுள்ள திறத்தையும் காணமுடிகிறது. இதழாசிரியர் தம் நூல்கள், பிற இதழ்கள், பிற எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி இதழுக்கு வருமானத்தைத் தருகின்ற உற்பத்தி பொருள்களை அறிமுகப்படுத்தும் விளம்பரங்களையும் வெளியிட்டுள்ளனர். இதழ்களில் விளம்பரம் செய்வதற்கான கட்டணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன". ஓர் இதழைப் பொறுப்பேற்று நடத்துவதில் உள்ள நுணுக்கங்களை உணர்ந்து பெண்கள் நடத்தியுள்ள விதம் புலனாகிறது (Samy, 1987).

## பெண் இதழ் ஆசிரியர்கள்

இருபதாம் நூற்றாண்டு காலகட்டம் தொடங்கி பெண் எழுத்துகளை ஒவ்வொரு பத்தாண்டுகளாகப் பிரித்துப் பார்த்தால் மொழியின் போக்கை நாம் நன்கு அறிய முடியும் (Rajendran & Packiamuthu, 2022). செய்யுளின் பயன்பாடு மெல்ல மெல்ல அருகி உரைநடை அதன் வடிவத்தைச் செழுமைப்படுத்திக் கொண்டது. அத்துடன் கால மாற்றத்திற்கு ஏற்ப பெண் எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. பெண்களுக்கான வாழ்வு இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற வரையறையுடன் பெண்களின் எழுத்துகள் இருந்தன. பெண்கள் பகுதியில் இடம்பெறும் கற்புக்கரசிகளின் கதைகள், மனைவியின் கடமை பற்றிய அறிவுறுத்தல்கள், சமையல், தையல், அழகுக் குறிப்புகள், குடும்பக் கடமைகளை வலியுறுத்தல் போன்றவற்றைப் பெண்களே எழுதுவதன் மூலம் உணரலாம்.

தொடக்க காலகட்டத்தில் பெண்கள் ஆசிரியராகப் பொறுப்பேற்று இதழ்களை நடத்தியுள்ளனர்.

1. கோ. ஸ்வப்பனேஸ்வரி அம்மாள் - தமிழ் மாது
2. பண்டிதை விசாலா அம்மாள் - ஹிதகாரிணி
3. ஆர். தாயாரம்மா - பெண்கல்வி
4. சகோதரி வி. பாலம்மாள் - சிந்தாமணி
5. வை. மு. கோதைநாயகி அம்மாள் - ஜகன்மோகினி
6. மு. மரகதவல்லி - மாதர் மறுமணம்
7. குகப்ரியை - மங்கை

ஆகியோர் தொடக்ககால இதழியல் துறையில் ஆசிரியர்களாக இதழ்களை நடத்தி வெற்றி பெற்றவர்கள் (Theva Thatha, 1990; Vijayakumar, 2022).

## பெண் எழுத்துகளின் உள்ளடக்கம்

தொடக்க காலகட்டங்களில் வெளிவந்த இதழ்களில் எழுதிய பெண்கள் பல பொருண்மைகளில் தங்களின் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். அவை பெண் மையப் பொருண்மைகளாகவும் பொதுப் பொருண்மைகளாகவும் இடம்பெற்றுள்ளன. பெண் எழுத்தாளர்கள் அன்றைய தங்கள் சமகால சக பெண்களும் பெண் எழுத்தாளர்களும் சந்திக்கின்ற சிக்கல்களையும் அவற்றுக்கான தீர்வுகளையும் அதாவது தீர்வு என தாங்கள் கருதியவற்றை தங்களின் எழுத்துகள் மூலம் முன்வைத்துள்ளனர். "பெண்கல்வி, பெண் சுதந்திரம், பெண்களின் திருமணம், வரதட்ணை, பெண்களின் சொத்துரிமை, அரசியலில் பெண்களின் நிலை, தேவதாசி முறை ஆகிய முக்கியமான சிக்கல்களை மையமிட்டு விரிவாக எழுதியுள்ளனர். பெண்கல்வியைப் பொறுத்தவரையில் பெண்கல்வியின் தேவையைக் கூறுதல்

பெண்கல்வி தொடர்பான சிந்தனைகளையும் ஆலோசனைகளையும் முன்வைத்தல் தற்கால பெண்கல்வியில் தேவைப்படும் சீர்திருத்தங்கள் எனப் பலவற்றை ஆராய்ந்துள்ளனர். பெண் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுகையில் பெண்ணின் அடிமை வாழ்வு பெண் சுதந்திரத்தின் தேவை ஆகியவற்றைச் சுட்டியுள்ளனர். பெண்களின் திருமண வயது, அது தொடர்பான சட்டங்கள், திருமணத்தில் பெண்களின் விருப்பம் போன்றவற்றை முன்னிறுத்தியும் இது தொடர்பான வரதட்சனை வழக்கத்தின் கேடு பற்றியும் பலதார மணத்தடை பற்றியும் இவை தொடர்பான சட்டங்கள் இயற்றுவது குறித்தும் பேசியுள்ளனர். விதவைப் பெண்களின் துன்பங்களை எடுத்துரைத்து மறுமணத்தின் அவசியத்தையும் வலியுறுத்தினர். சொத்துரிமை இன்மையால் பெண்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை எடுத்துக் கூறியுள்ளனர். மேலும் பெண்களுக்கு வாக்குரிமை, அரசியலில் பங்கேற்கும் உரிமை, தேவதாசி முறையை ஒழிப்பது குறித்த சர்ச்சைகள் குறித்த பதிவுகளும் இடம்பெற்றுள்ளன" (Methila, 2010). பெண்களை மையமிட்ட பொருண்மைகள் மட்டுமின்றி பொதுவான பொருண்மைகளான இலக்கியம், அறிவியல், கடவுள் நம்பிக்கை, உடல்நலம், மருத்துவம், இசை, நடனம், திரைப்பட விமர்சனம், காந்தியத் தாக்கம், மேற்கத்திய நாகரிக வெறுப்பு எனச் சமூகத்தின் பன்முகப்பட்ட பிரச்சனைகளையும் இதழ்களில் பதிவு செய்துள்ளனர்.

## பெண்களும் அரசியலும்

பெண்களுக்கு அரசியலில் 33 சதவிகித ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதே இன்று சிக்கலுக்குள்ளான ஒரு செயலாக இருக்கின்றது என்றால் 85 ஆண்டுகளுக்கு முன்பே அரசியலில் பெண்களும் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தை அதுவும் ஒரு பெண் பதிவு செய்வது மிகவும் துணிகரமான ஒன்றே ஆகும். "சென்னை மாகாணத்தில் பெண்களுக்கும் ஓட்டுரிமை கிடைத்துள்ளது பற்றியும் அதனைத் தொடர்ந்து பெண்கள் செல்ல வேண்டியப் பாதை மக்கள் பிரதிநிதியாக சட்டசபையில் இடம்பெற வேண்டியதே என்பதை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார்" (Palammal, 1924). பெண்கள் தங்கள் தேவை என்ன என்பதை நன்கு அறிந்தவர்கள் ஆகையால் சட்ட சபையில் இடம்பெற கல்விஅவசியமில்லை என்பதால் அனுபவமுள்ள பெண்கள் இடம்பெறலாமெனக் கூறுகிறார். அத்துடன் சட்டசபை நடவடிக்கைகள் அனைத்தும் தாய்மொழியில் இருக்க வேண்டும் என்றும் பெண்களின் சிக்கல்களைப் பேச பெண்களே இடம்பெற வேண்டும் என்பதையும் கூறி அவ்விதம் இல்லாத நிலை குறித்துக் கேள்வியும் எழுப்புகிறார்.

இந்திய தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் இப்பண்பாட்டைப் பேணிக் காக்கும் பொறுப்பாளர்களாகப் பெண்கள் முன்னிறுத்தப்படுவதும் அப்பொறுப்பைக் கேள்வியின்றி எடுத்துச் செய்கின்றவர்களாகப் பெண்கள் இருப்பதும் இந்த உள்ளடக்கங்களின் ஊடாக இழைந்திருக்கின்றன. பண்பாட்டு எல்லையை மீறாத, மேலை நாகரிகத்தை வெறுக்கின்ற, பண்டைய இந்திய நாட்டின் பெருமையையும், உன்னத நிலையையும் மீண்டும் நிலைநிறுத்த முயல்கின்ற முயற்சியாகப் பெண் எழுத்தின் ஒட்டுமொத்த உள்ளடக்கத்தின் பின்புலத்தை வரையறுக்கலாம். குமரன் இதழில் இடம்பெறும் பகுத்தறிவு அடிப்படையிலான ஒரு சில பெண் எழுத்துகள் தவிர இது அனைத்து எழுத்துகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

பெண்கள் தமது கல்வியறிவைப் பயன்படுத்தி அக்காலச் சூழலுக்கேற்ப எழுத்துப் பணியை ஆற்றியுள்ளனர் என்பது மறுக்கமுடியாது. தங்களுக்கு எழுதக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பெண்கள் தங்களுடைய சிக்கல்களைப் பற்றி பேசியுள்ளனர். பெண் கல்வியின் தேவையை வலியுறுத்தியுள்ளனர். குடும்பத்தையும் இந்திய தமிழ்ப் பண்பாட்டையும் பேணுதலே தங்கள் முக்கியக் கடமை எனவும் பெண்கள் நம்பியுள்ளனர். இதைச் சார்ந்தே பெண்ணுக்கான அனைத்து விசயங்களும் பேசப்பட்டுள்ளன. இதழ்களில் எழுதிய பெண்கள் வெகுகவனமாகக் குடும்பப்பெண் என்பதைத் தங்கள் அடையாளமாக எழுத்து வெளியில் காட்டிக்கொள்ளத் தவறவில்லை. அதைத் தவறவிட்டால் அது பெண் சமூகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையிடும்.

அந்தக்காலச் சூழலுக்கேற்ப அரசியல் தளத்திலும் குறிப்பாக காந்தியக் கொள்கையிலும் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். அரசியலில் ஈடுபடுவதற்கான நியாயப்பாட்டை காந்தியிடமிருந்தே பெற்றுள்ளனர். அரசியலில் பங்கெடுப்பதற்கான ஊக்கத்தை இதழில் எழுதிய பெண்கள் வாசகப்

பெண்களுக்கு ஊட்டியுள்ளனர். வெகுசனத் தன்மை உருவாவதற்கான சாயல்கள் தோன்றியுள்ளதையும் இந்தப் பெண் எழுத்துகளில் காணமுடிகிறது.

## முடிவுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் பெண்களின் இலக்கியப் பங்களிப்பு வெற்றிடமாக இருந்திருக்கவில்லை. இந்த வரலாற்றுடன் பெண்கள் எழுதி வெளியிட்டுள்ள அச்சு நூல்கள் வழியும் திராவிட இயக்கத்தின் இதழ்கள், நூல்கள் வழியும் பொதுவுடைமை இயக்கத்தின் இதழ்கள், நூல்கள் வழியும் அறியப்படும் பெண்களின் இலக்கியப் பங்களிப்பைக் குறித்தான முற்றுமுழுதான ஆவணமும் ஆய்வும் பெண் எழுத்து வரலாற்றினை முழுமை நோக்கி இட்டுச் செல்லும். பெண்கள் இந்தியப் தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் இப்பண்பாட்டைப் பேணிக் காக்கும் பொறுப்பாளர்களாகப் பெண்கள் முன்னிறுத்தப்படுவதும் இதழ்களின் வழியாக நடந்தேறியது. பெண்கள் தமது கல்வியறிவைப் பயன்படுத்தி அக்காலச் சூழலுக்கேற்ப எழுத்துப் பணியை ஆற்றியுள்ளனர் என்பது மறுக்கமுடியாதது. வெகுசனத் தன்மை சார்ந்தோ அன்றியோ பெண் எழுத்துகள் இருந்துள்ளன. அந்தகால சமூகச் சூழலுக்கேற்பவும் அதே சமயத்தில் பெண்களின் அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தியும் பல்வேறு சமூக மறுதல்களுக்குக் களமாக பெண்கள் தங்கள் எழுத்துகளை பயன்படுத்தி உள்ளதை அறியலாம்.

## References


Arasu, V. (2001) Punaivin Varalarum Vacipin Arasiyalum, Elavazhagan Pathipagam, Chennai, India.

Methila, R. (2010) Pen Ezhuthu, Adaiyalam Press, Putha Nththam, Chennai, India.

Palammal, V. (1924) Sinthamani Magazine (September), Chennai, India.

Rajendran, V., Packiamuthu, A., (2022). Feminism in the view of Tamil Women Writers, International Research Journal of Tamil, 4(SPL 1), 147-152. https://doi.org/10.34256/irjt22s120

Samy, A.M. (1987) Origin and Growth of Tamil Magazines, Navamani Pathippagam, Chennai, India.

Selvakumaran, S. (2021) Feminist thought in the Poems of Modern Women Poets, International Research Journal of Tamil, 3(4), 122-129. https://doi.org/10.34256/irjt21415

Theva Thatha, (1986) Ethazhgal Sithirigum Pengalin Nelai, Mother Deresa Wemen's University, Kodaikanal, India.

Vengadasamy, M.S. (1962) Tamil Litrature in Ninenth Century, Santhi Nilayam, Chennai, India.

Vijayakumar, P. (2022) Tamizh Maathu Ko Swappaneshwari Ambal, International Research Journal of Tamil, 4(SPL 2), 160-166. https://doi.org/10.34256/irjt22s225


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License